www.padippakam.com

# நிக்கவரெட்டிய தாக்குதல்!

வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக தென்னிலங்கையில் முதன்முதலாக காவல்நிலையம் வெற்றிகரமாக தாக்கப்பட்டது. எந்த விதத்திலும் இரு தரப்பிலும் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்படாமல் இத்தாக்குதல் மூலம் அனைத்து அரசு ஆயுதங்களும் அந்த நிலையத்திலிருந்து கைப்பற்றினோம்.

சிறி லங்காவில் வாழக்கூடிய மக்களின் இதயம் எனக்கருதப்படும் தொழிலாளர்கள் செறிந்து வாழும் குருநாகல் மாவட்டத்தில் உள்ள நிக்கவரட்டியா என்னும் காவல்நிலையம் கடந்த 25.4.85 அன்று அதிகாலை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் முதலாளித்துவ அரசை எதிர்க்க உழைக்கும் வர்க்கம் அடியெடுத்து வைத்துள்ளது. கடந்த காலங்களில் தமிழ் தேசியஇனப்போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டம் அல்ல என்பதனையும், இப் போராட்டம் ஸ்ரீலங்காவின் இனவாத, முதலாளித்துவ, பாசிச அரசிற்கெதிரான போராட்டம் என்பதை வலியுறுத்தி வந்துள்ளோம். அதன் அடிப்படையில் எமது போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மைகளைக் கொண்டது என்பதையும், இப்போராட்டத்திற்கு ஸ்ரீலங்காவில் வாழக்கூடிய முற்போக்கு சக்திகளும், தொழிலாளர் விவசாய மக்களும் [illegible] முதலாளித்துவ அரசை எதிர்க்க வேண்டிய அவசியத்தையும், கடந்த காலங்களில் எமது வெளியீடுகள், பிரச்சாரங்கள் தமிழீழத்தின் குரல் ஒலிபரப்புகள், ஆகியவற்றின் மூலம் வலியுறுத்தி வந்துள்ளோம். இக்கொள்கையிலேற்பட்ட முதல் வெற்றியாக நிக்கரவெட்டிய காவல்நிலையக் காவலர்கள் எமக்கு ஒத்துழைத்தமை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நாம் அடைந்த முதல் வெற்றியாகும். ஸ்ரீலங்கா இராணுவ காவல் மற்றும் அனைத்து அரசபடையிலும், பணியாற்றும் தொழிலாளர் ~~மற்றும் காவல் காவலர்,~~ ஸ்ரீலங்காவில் வாழக்கூடிய பாட்டாளிகளின் பிள்ளைகளே என்பதை நாம் மறந்துவிடவில்லை. இப்போராட்டத்தில் காவல் நிலையத்தைச் சேர்ந்த ஓர் தோழர், பாட்டாளியின் மகன், தவிர்க்க முடியாத நிலையில் இறந்ததை நாம் துயரத்துடன் நோக்குகிறோம். அவர் எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் அவர் எமது எதிரியின் எதிரி. எமதுசக தோழர் என்பதையும் நாம் மறந்துவிடவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொடர்ந்தும் வெற்றியடைவோம். அனைத்து அடக்கு முறைகளையும் ~~வென்றெடுப்போம்~~. உடைத்தெறிவோம்.

சோ. கண்ணன். 28.04.1985

(படைத்துறைச் செயலர்.)

தேசிய அரசியல் சபை.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்.

படிப்பகம்